RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22284

OPEN ACCESS

# ஔவையாரின் நல்வழி காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

க. ஆறுமுகம் [அ, *], லெனின் [அ], தெ. வெற்றிசெல்வன் [ஆ]

[அ] பெரியார் உயராய்வு மையம், பெரியார் மணியம்மை அறிவியல் தொழிநுட்ப நிலையம், வல்லம், தஞ்சாவூர்-613403, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] அயலகத் தமிழியல் துறை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா.

# Avvaiyar's thoughts on life guide

**S. Arumugam [a, *], N. Lenin [a], D. Vetrichelvan [b]**

[a] Periyar Maniammai Institute of Science & Technology, Vallam, Thanjavur-613403, Tamil Nadu, India

[b] Department of Tamil Studies in Foreign Countries, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India

* Corresponding Author: arumugamkpmi@gmail.com

Received: 02-09-2022
Revised: 27-10-2022
Accepted: 17-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Among the poets of Tamil literature, Avvaiyar has carved a niche for himself by his ability to express himself through knowledge, personality, erudition and erudition. In his history of Tamil literature, M. Arunachalam mentions that there lived six women poets in the name of Avvaiyar. Avvaiyar, who wrote books like Aathisudi, Konrai Vendan, Nalvazhi and Moothurai during the Chola period, is the avvaiyar of our article. It is a Tamil law book and derives its name from the fact that it describes the good ways that people should follow in their lives in Nerisai Venba. This article goes on to tell the family and the individual in many ways that the society should avoid wasteful expenditures and spend on the budget and that the air tip is the best and the sweet word is the best.

**Keywords:** Tamil Literature, Avvaiyar, Nerisai Venba, Expenditure

## முன்னுரை

தமிழிலக்கியப் புலவர்களுள் அறிவால், ஆளுமையால் புலமையால் புலப்படுத்தும் ஆற்றலால் தனக்கென தனியிடம் பெற்றவர் ஔவையார். ஔவையார் என்னும் பெயரில் ஆறு பெண்புலவர்கள் வாழ்ந்துள்ளனர் என மு.அருணாசலம் தம் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

சோழர்காலத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை ஆகிய நூல்களை எழுதிய ஔவையாரே நமது கட்டுரை தொடர்பான ஔவையார் ஆவார். இது ஒரு தமிழ் நீதி நூல், மக்கள் தம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நல்வழிகளான நேரிசை வெண்பாவில் இந்நூல் எடுத்துரைப்பதால் இப்பெயர் ஏற்பட்டது.

## வரவு அறிந்து செலவு செய்க

விழாக்கள் மற்றும் சடங்குகளில் வீண் செலவுகள் ஏற்படுகின்றன. திருமணங்கள் மற்றும் சடங்குகள் நடத்த கடன் வாங்கி செலவு செய்து கடன்காரர்களிடம் மாட்டிக் கொண்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது என்றும், பொருளாதார தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் ஆனால் இன்றைய நடைமுறையில் பொருளாதாரத்தில்

நிறைவு பெறவில்லை என்றாலும் சிறுகடன் பெற்றாவது அநேகர் ஆடம்பரமாகவே வாழ விரும்புகின்றனர் என்று தந்தை பெரியார் கூறுகின்றார். பின் வரும் நல்வழிப்பாடல் இக்கருத்தை தெளிவுபடுத்துகிறது.

"ஆன முதலில் அதிகம் செலவானால்

மானம் அழிந்து மதிகெட்டுப் போனதிசை

எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்

நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

ஒருவன் தன் வருவாயை விட அதிகம் செலவு செய்தால், அவன் கடன் வாங்கி தன் மானத்தை இழந்து, சொந்த புத்தியை இழந்து போகவேண்டிய சூழல் ஏற்படும். போகும் திசை எல்லாம் அவனை எல்லாரும் திருடனைப் போல் பாவித்து அவனிடம் பேச தவிர்ப்பர் ஏழு பிறப்புக்கும் தீயவனாய் நல்லவர்களுக்கு ஆகாதவனாய் மாறிவிடுவான், ஆதலால் வருவாய்க்கு அதிகமாக செலவு செய்யக்கூடாது (Keerthi, 2007).

## நிலத்தின் தன்மையால் நீரின் குணம்

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு

இனத்தியல்ப தாகும் அறிவு"

சேர்ந்த நிலத்தின் இயல்பால் அந்த நீர் வேறுபட்டு அந்நிலத்தின் தன்மையுடையதாகும், அதுபோல் மக்களுடைய அறிவு இனத்தின் இயல்பினை உடையதாகும். மேற்கண்ட திருவள்ளுவரின் கருத்து பின்வரும் நல்வழிப்பாடலில் தண்ணீரின் குணம் நிலத்தின் தன்மையாக கூறப்படுகிறது (Varadharasanar, 1949).

"தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம் கொடையால்

கண்ணீர்மை மாறாக் கருணையால் பெண்ணீர்மை

கற்பழியா ஆற்றல் கடல்சூழ்ந்த வையகத்துள்

அற்புதமாம் என்றே அறி"

கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் தண்ணீரின் குணம் - பெருமை அது இருக்கும் நிலத்தின் தன்மையினாலும், நல்ல மனிதர்களின் குணம் - பெருமை அவர் செய்யும் தர்ம காரியங்களினாலும், கண்ணின் பெருமை கருணை பொங்கும் விழிகள் மூலமும் சிறந்த பெண்ணின் குணம் - பெருமை அவளின் கற்பு நெறி மாறாப் பண்பினாலும் நீ அறியலாம்.

## ஏர் முனையே சிறப்பானது

"ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை

என்றும் எங்கள் வாழ்விலே பஞ்சமே இல்லை"

என்று கவிஞர் மருதகாசி கூறுகின்றார்.

திருவள்ளுவர் உழவு என்று தனி அதிகாரமே படைத்துள்ளார். அதில்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை"

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத்தொழிலே சிறந்தது (Varadharasanar, 1949).

"சும்மா கெடந்த நிலத்த கொத்தி

சோம்பலில்லாமல் ஏர் நடத்தி"

எனறு மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் திரையிசைப் பாடலில் விவசாயப் பணியினை வளமையான வார்த்தைகளால் வடிவமைத்துள்ளார். உழுதுண்டு வாழ்வதே சிறப்பானது என நல்வழியின் பன்னிரெண்டாவது பாடல் பின்வருமாறு கூறகின்றது.

"ஆற்றாங்கரையின் மரமும் அரசறிய

வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில் கண்டீர்

பழுதுண்டு வேறோர் பணிக்கு"

ஆற்றங்கரையில் உள்ள மரம், அரச வாழ்க்கை போகம் ஆகியவை நிலையில்லாமல் அழிந்துவிடும். உழுதுண்டு வாழும் வாழ்வை விட மேலான வாழ்க்கை வேறு ஒன்று இங்கு இல்லை. மற்ற வேலை அனைத்தும் உழவை விட குறைவானவை தான்.

## இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று

"தவறுக்கு துணிந்த மனிதன் அழுவதில்லையே

தவறியும் வானம் மண்ணில் விழுவதில்லையே"

என கவிஞர் கண்ணதாசன் திரையிசைப் பாடலில் கூறியிருப்பார்.

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும்"

ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும், ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகிவிடும். மேற்கண்ட கருத்தை நல்வழி இனிதே பின்வருமாறு விளக்குகின்றது (Varadharasanar, 1949).

"இழுக்குடைய பாட்டிற் (கு) இசை நன்று (;) சாலும்

ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - வழுக்குடைய

வீரத்தின் நன்று விடாநோய் (;) பழிக்கஞ்சாத்

தாரத்தின் நன்று தனி"

இலக்கண பிழை உடைய பாட்டு எழுதுவதை விட உரைநடை நல்லது. உயர்குலத்தில் பிறந்து ஒழுக்கம் தவறுவதை விட உயிரை விடுவது நன்று திறமையில்லாத வீரத்தில் போர்களம் சென்று புறமுதுகிட்டு ஓடி உயிரை விடுவதைவிட தீராத வியாதியினால் உயிர்போவது நல்லது. தவறு செய்தால் பழிநேருமே என்று அஞ்சாமல் தவறு செய்யும் பெண்ணுடன் வாழ்வதைவிட தனியாக வாழ்வது நல்லது, இலக்கண பிழையுடைய பாட்டும், நல்லொழுக்கம் இல்லாத உயர்குலமும், தவறுதல் அடையும் வீரமும், கற்பில்லாத மனைவியோடு கூடிய இல்வாழ்க்கையும், தீரா வசையை விளைவிக்கும்.

## நிலையற்ற செல்வம்

"எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்

இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"

என்ற திரையிசைப் பாடலில் பாலென அழுவோர்க்கு பால் தருவோம் கூழ் எனக் கேட்பவருக்கு கூழ் தருவோம் எனக் கவிஞர் கண்ணதாசன் வார்த்தை ஜாலம் புரிந்திடுவார், செல்வத்தின் பயனே ஈதல் ஆகும். செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதலாகும், பசி என்று வந்தவருக்கு அன்னம் இடுங்கள் என்று பின்வரும் நல்வழி பாடல் அறிவுறுத்துகின்றது.

"ஆறிடும் மேடும் மடுவும்போ லாம் செல்வம்

மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்

தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக

உண்ணீர்மை வீறும் உயர்ந்து"

ஆறு வரும் வழியில் உண்டாக்கும் மேடும் பள்ளம் போல, நம்முடைய செல்வம் ஒரு நாள் அதிகமாகும் அல்லது குறையும். பூமியில் வாழும் மனிதர்களே இதை உணர்ந்து உங்களிடம் செல்வம் இருக்கும்போதே பசி என்று வந்தவருக்கு தண்ணீர் கொடுங்கள். நீங்கள் செய்த தர்மம் உங்களின் தலைகாக்கும், அதுவே உங்கள் உயிர் உயரும் உபாயம் ஆகும்.

## இன்சொல்லே சிறப்பானது

"இனியவை கூறல் என்ற அதிகாரத்தில்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ

வன்சொல் வழங்கு வது"

இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றிற்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ? என்று திருவள்ளுவர் கூறுகின்றார் (Varadharasanar, 1949).

"இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக

வன்சொல் களை கட்டு வாய்மை எருவட்டி

அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் என ஓர்

பைங்கூழ் சிறுகாலைச்செய்"

என்ற முனைப்பாடியார் இயற்றிய அறநெறிச் சாரத்தில் இன்சொல்லுடன் பழகினால் நம்மை யாரும் அழிக்க முடியாது என பின்வருமாறு நல்வழியில் கூறப்பட்டுள்ளது.

இனிய சொல்லையே விளை நிலமாகக்கொள்ள வேண்டும், அதில் ஈகை என்னும் பண்பை விதையாக விதைக்க வேண்டும், வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும், உண்மை பேசுதல் என்னும் எருவினை இட வேண்டும் அப்போது தாம் அறமாகிய கதிரைப் பெறமுடியும். இளம் வயதிலேயே இச்செயல்களைச் செய்ய வேண்டும்

"வெட்டவை மெத்தனவை வெல்லாவாம் (;) வேழத்தில்

பட்டுருவும் கோல் பஞ்சில் பாயாது - நெட்டிருப்புப்

பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்

வேருக்கு நெக்கு விடும்"

பெரிய யானையின் மீது அம்பு பாய்ச்சினால் அது அதைக்கொன்று விடும், அதே அம்பை பஞ்சு மூட்டையில் எறிந்தால் அது மூட்டையை துளைத்து வெளியே சென்றுவிடாது, பஞ்சுக்கு ஒரு சேதாரமும் ஆகாது. கடிய கடப்பாரைக்கு வளைந்து கொடுக்காத பெரிய பாறை, சிறிய செடியின் வேர் ஊன்றி வெடித்து உடைந்து விடும் (Keerthi, 2007).

அதுபோல் கண்டிப்பான குணங்களாலும் கடுமையான சொற்களாலும் ஒரு காரியத்தை சாதிக்க முடியாது, மென்மையான இன்சொல்லுடன் பழகினால் நம்மை யாரும் அழிக்க முடியாது. கடுமையான விஷயங்களையும் சுலபமாக சாதிக்கலாம்.

## பூ பூக்காமல் காய்க்கும் மரங்கள்

"ஏவா மக்கள் மூவா மருந்து

கொன்றை வேந்தன்"

ஏவாமல் குறிப்பறிந்து செயல்படும் மக்கள் இருப்பின் அவர்கள் ஒருவனுக்கு மூப்பில்லா வாழ்வைத்தரும் மருந்தாகப்பயன்படுவர். மூப்பில்லாமல் வாழ ஒரு மருந்து இருக்கிறது என்பது ஒருவனது குறிப்பறிந்து செயல்படும் மக்கள்தான். சுறு சுறுப்பானவனின் சிந்தனை சுகத்தை தரும் என விவிலியம் கூறுகின்றது. விரைந்து பணியாற்றும் பழக்கம் சிறப்பானது அதற்கு திட்டமிடல் அவசியமானது. சிலர் வேலையைத் தொடங்குவார் முடிப்பதில்லை அதற்கான காரணம் சரியான திட்டமிடாமை மற்றும் விரைந்து பணிற்றும் திறன் இல்லாமையுமே ஆகும், குறிப்பறிந்து பணியாற்றுபவர்கள் சிறப்பானவர்கள். மொத்தத்தில் சோம்பலை ஒழித்து உழைத்தால் வெற்றி நிச்சயம். மேற்கண்ட கருத்தை நல்வழி பின்வருமாறு கூறுகின்றது.

"பூவாதே காய்க்கும் மரமுள மக்களுளு

ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே - தூவா

விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு

உரைத்தாலும் தோன்றா (து) உணர்வு"

பூ பூக்காமல் காய்க்கும் மரங்கள் உள்ளன (Keerthi, 2007). அதுபோல் ஏவல் செய்வதற்கு முன் குறிப்பறிந்து வேலை செய்யும் வேலைக்காரர்களும் உள்ளனர். இதற்கு மாறாக தூவி விதைத்தாலும் முளைக்காத விதைகள் உள்ளன. அதுபோல் மூடர்களுக்கு எத்தனை உரைத்தாலும் அவர்கள் மாறமாட்டார்கள்.

## காலம் கருதி ஒரு செயலை தொடங்க வேண்டும்

'காலமும் கடல் அலைகளும் யாருக்காகவும் காத்திருபப்தில்லை'

தொடுத்துவிடட் அம்பு கடந்துவிட்ட காலம்

பேசிவிட்ட வார்த்தை - இவைகளை மீண்டும் பெற முடியாது'

ஞாலம் கருதினும் கைகூடும், காலம்றள்

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் உலகமே வேண்டும் எனக் கருதினாலும் கைகூடும். காலம் கருதி ஒரு செயலை தொடங்க வேண்டும் என்பதை நல்வழி பாடல் பின்வருமாறு உணர்த்துகின்றது.

"எண்ணி ஒரு கருமம் யாற்க்கும் செய் ஒண்ணாது

புண்ணியம் வந்தெய்து போதல்லால் - கண்ணில்லான்

மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே

ஆங்காலம் ஆகும் அவர்க்கு"

கண்தெரியாத குருடன் மாங்காய் அடிக்க முயற்சி செய்து அவன் கையில் வைத்திருந்த கோலை இழப்பதைபோல், ஒருவன் காலம் அறியாமல் ஒரு செயலை செய்தால் அவனிடம் உள்ளதையும் இழக்க நேரிடும். நாம் செய்த புண்ணியத்தின் பலனாக, ஒரு காரியம் கைகூடும் வேலை

வரும் வரை நாம் செய்யும் எந்த முயற்சியும் பலன்தராது. அதனால் காலம் கருதி ஒரு செயலை தொடங்க வேண்டும் (Keerthi, 2007).

## ஊற்று நீர் இந்த உலகத்திற்கு உதவும்

"நல்ல குடியில் பிறந்தவர்கள் நல்ல காரியங்களையே செய்வர்.

அட்டாலும் பால்சுவையில்

குன்றாது; அளவளாய்

நட்டாலும் நண்பு அல்லார்,

நண்பு அல்லர்,

கெட்டாலும் மேன்மக்கள்

மேன்மக்களே சங்கு

சுட்டாலும் வெண்மை தரும்"

பாலினை எவ்வளவு காய்ச்சினாலும், அது தனது இனிய சுவையில் குறைவதில்லை, சங்கினை எவ்வளவு சுட்டு நீராக்கினாலும் அது வெண்ணிறத்தையே கொடுக்கும். அவை போலவே மேலோர் வறுமையுற்றாலும் மேலோராகவே விளங்குவர் (Visuvanatham, 2019).

உயர்ந்த குணங்களை கொண்டவர்கள் உயர்ந்தோர்கள் என்று அறியப்படுகின்றது. மேற்கண்ட கருத்தை பின்வரும் நல்வழி பாடல் அறிவுறுத்துகின்றது,

"ஆற்றுப்பெருக்கற் றடிசுடமந் நாளுமவ்வா

ஊற்றுப்பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு

நல்ல குடி பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்

இல்லை என மாட்டார் இசைந்து"

கால்சுடும் அளவிற்கு நீர் வற்றிபோய் வெரும் மணலாக ஆறு வற்றிபோனாலும் அதை தோண்டுவோருக்கு, ஊற்று நீர் கொடுத்து இந்த உலகத்திற்கு உதவும் நதியைப்போல நல்ல மனம் படைதோர், நல்ல காரியங்கள் செய்யும் நல்ல குடியில் பிறந்தோர் தங்களுக்கு. இல்லை யென்றாலும் அடுத்தவர் கேட்கும் போது தங்களிடம் உள்ள பொருளையும் கொடுத்து உதவுவார்கள்.

## ஒருநாள் உணவை ஒழியென்றால்

"அற்றால் அளவறிந்து உண்க; அஃதுடம்பு

பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு" (Varadharasanar, 1949)

முன் உண்ட உணவு செரித்துவிட்டால், பின் வேண்டிய அளவு அறிந்து உண்ணவேண்டும், அதுவே உடம்பு பெற்றவன் அதை நெடுங்காலம் செலுத்தும் வழியாகும். உணவை கேட்கும் வயிற்றோடு ஔவையார் பின்வருமாறு உரையாடுகின்றார்.

"ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்

இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய் - ஒருநாளும்

என்நோ(வு) அறியாய் இடும்பைகூர் என்வயிறே

உன்னோடு வாழ்தல் அரிது"

ஒரு நாள் எனக்கு பசி வேண்டாம் அமைதியாக இரு என்று சொன்னால் வயிரே நீ கேட்க மாட்டாய், சரி உணவு அதிகமாக கிடைக்கிறது ஆகையால் இரண்டு மூன்று நாட்களுக்கு தேவையானவற்றை இன்றே நிரப்பிக்கொள் என்றால் அதையும் செய்ய மாட்டாய், நாள் தவறாமல் ஒவ்வொரு வேலையும் உன்னையை நிரப்புவதே பெரும் வேலையாக இருக்கிறது, உன் தேவைக்காகவே பலருடன் போராடவேண்டி இருக்கிறது, உன்னோடு வாழ்வது துன்பத்தை தருகிறது.

## முடிவுரை

'நல்வழிகாட்டும் வாழ்வியல் சிந்தனைகள்' என்ற இந்த ஆய்வுக் கட்டுரையானது வாழ்வியல் கருத்துக்களை தனி மனிதனுக்கு குடும்ப வாழ்விற்கு சமுதாயத்திற்கு எளிமையாக விளக்கி கூறப்படுகிறது. கவிஞர்கள் மருதகாசி, பட்டுக்கோட்டையார், கண்ணதாசன் பாடல் வரிகள், திருக்குறள், மூதுரை, அறநெறிச்சாரம், கொன்றைவேந்தன் போன்ற பாடலின் கருத்துக்கள் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன, இக்கருத்துக்கள் சமுதாயத்திற்கு பயன்படும். மேலும் நல்வழி கருத்துக்கள் தமிழ் கூறும் நல்லுலகு கடந்த அனைவரும் அறிய வேண்டும் நீதி கருத்துக்களை வாழ்வியல் நெறியாக கடைப்பிடிக்க வேண்டும்.

## References

Keerthi, (2007) Avvaiyarin Aathichudi, (Kondrai vendhan, Moodhurai, Nalvali ulladankiyathu, Aruna Publication, Chennai, India

Varadharasanar, M. (1949) Thirukural Thelivurai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Visuvanatham, (2019) Nanmanikadikai, Alagu Nila, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License